2013 ஏப்ரல் 17]

248—

ஆலைக் கழிவு

***23941—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி வாய்க்காலில் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு கிராமத்தில் அமைந்துள்ள என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கழிவுநீர் ஆலை வளாகத்தில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரின் ஒரு பகுதி உற்பத்திக்கும், மீதமுள்ள கழிவுநீர் ஆலை வளாகத்தில் பயிரிடப்பட்டுள்ள கரும்புப் பயிர் சாகுபடிக்கும் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது கரும்பு ஆலையில் அரைவைப் பருவம் இயங்கி வருகின்றது. சர்க்கரை ஆலையின் கழிவுநீர் விதிமுறைகளின்படி வெளியேற்றப்படுகின்றதா என்பதைத் தொடர்ந்து வாரியம் கண்காணித்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னையும் வருத்தி, தன் உடலையும் வருத்தி, இந்தத் தமிழகத்திற்காக அனல் விரிந்து கிடக்கும் வழியெல்லாம் மலர் கொத்து மீது நடப்பதுபோல் கடந்து செல்லும் தெய்வீகச் சக்தியாம் நம் அன்னை! காவியங்களும் கண்டிராத (மேசையைத் தட்டும் ஒலி) காவியத் தலைவி! பாரதியின் புதுமைப் பெண்! உலக அரங்கில் தமிழர்களை தலைநிமிர்ந்து நடக்கச் செய்த உன்னதத்

தலைவி! தரணி போற்றும் தங்கத் தாரகை! விலையில்லா அரிசி தந்து வீடுகள்தோறும் அன்னமிட்டு மகிழ்வதோடு இன்று 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தைத் தொடங்கி வைத்த எங்கள் அன்னலட்சுமியே! (மேசையைத் தட்டும் ஒலி) வறுமையே இல்லாத இந்தியாவை உருவாக்கும் வல்லமை படைத்த ஒரே தலைவி எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தெய்வீகத் திருவடியை வணங்குகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைஞாயிறு ஊராட்சியில் இயங்கி வரும் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் திருநகரி வாய்க்காலில் கலப்பதனால் பெருமங்கலம், ஆதமங்கலம், திருப்பங்கூர், கற்கோயில், வைத்தீஸ்வரன்கோயில், எடக்குடி வடபாதி, காரமேடு, கொண்டத்தூர், கதிராமங்கலம், கன்னியாகுடி ஆகிய ஊராட்சிகளிலுள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படுவதோடு, கழிவுநீர் கலந்த நீரை கால்நடைகள் பருகுவதனால் கால்நடைகள் நோய் பாதிப்புக்குள்ளாகின்றன. இந்தக் கழிவுநீர் குளங்களுக்கும் செல்வதால் அங்குள்ள மீன்களும் இறந்து விடுகின்றன. எனவே, ஏழை விவசாயிகளின் விடிவெள்ளியாக சிறப்பான ஆட்சியை தமிழக மக்களுக்குத் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்தக் கழிவுநீர் பாசன வாய்க்காலில் கலப்பதை முற்றிலும் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி சட்டமன்றத் தொகுதி திருநகரி வாய்க்காலில் கழிவுநீர் சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தால், திருநகரி வாய்க்காலில் நீர் மாதிரிகள் எடுத்து மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு விதிமீறல்கள் இல்லாமல் முழுமையாகக் கண்காணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீர் ஆற்றில் கலப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சீர்காழி, காரைக்கால், நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள தென்னலக்குடி ஊராட்சி பாலம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மிகவும் பழுதடைந்து, கேட்பாரற்றுக் கிடந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவதற்கு நேற்றையதினம் ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த கருணைத் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை பொருந்திய மாசற்ற மக்கள் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட வினா என்ற காரணத்தால் இந்தக் கேள்வியைக் கேட்கின்றேன். பொதுவாக இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு இடங்களிலே தனியார் மற்றும் பொது நிகழ்ச்சிகளிலே இந்தக் குழாய் வழியே ஸ்பீக்கர்களை உபயோகப்படுத்துகின்றார்கள். அது தடை செய்யப்பட்ட ஒன்றா? ஒருவேளை அப்படித் தடை செய்யப்பட்டிருந்தால் அதைப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும். அவற்றை உபயோகப்படுத்துவதன்மூலம் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கின்றது. பள்ளி மாணவ, மாணவியர்கள் படிக்க முடியவில்லை என்று பல இடங்களில் இருந்து புகார்கள் வருகின்றன. எனவே, அதை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூம்பு வடிவ ஒலிபெருக்கி ஒலியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் விதி இருக்கின்றது. குறிப்பாக, அந்தப் பகுதியில் இருக்கின்ற காவல் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகியோரிடம் ஒப்புதல் பெற வேண்டும். கூம்பு வடிவ ஒலிபெருக்கி மூலமாக ஏற்படுகின்ற ஒலியைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான கும்பகோணத்தில் 44, 45, 46-வது வார்டுகளில் இருக்கிற கழிவுநீர் அருகில் இருக்கிற பழவத்தாங்கட்டளை ஊராட்சியிலும் சீனிவாசநல்லூர் ஊராட்சியிலும் கலந்து, நாட்டாறு என்ற ஆற்றில் கலந்து அந்த ஆற்றை நாசப்படுத்துகிறது. அதைச் சீர்செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கழிவுநீர் ஆற்றில் கலப்பதாகக் குறிப்பிட்டார். நிச்சயமாக மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய பொறியாளரால் ஆய்வு மேற்கொண்டு, அந்தப் பகுதியில் கலப்பது தெரிந்தால் அந்த நகராட்சி நிருவாகத்திற்குத் தகவல் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.